**SPECIAL TOPIC: SAINTS**

**சிறப்பு தலைப்பு: பரிசுத்தவான்கள்** (*hagios*)

இது எபிரேய *kadosh*ஷின் (கடோஷின்) சமமானகிரேக்க பதமாகும் (NOUN, BDB 871; VERB, BDB 872, KB 1066-1067; சிறப்பு தலைப்பு: பரிசுத்தத்தைப் பார்க்கவும்), இது சிலரை, சிலவற்றை அல்லது சில இடங்களைத் வேறு பிரிப்பதற்கான YHWH இன் பிரத்யேக பயன்பாட்டு அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது "பரிசுத்தமான" என்ற ஆங்கில கருத்தை குறிக்கிறது. இஸ்ரேல் YHWH இன் "பரிசுத்த தேசமாக" இருந்தது (ஒ.பா. 1 பேதுரு 2: 9, இது யாத்திராகமம் 19: 6 ஐ மேற்கோள் காட்டுகிறது). YHWH அவரது இயல்பு (நித்திய, உருவாக்கப்படாத பரிசுத்தத்தன்மை) மற்றும் அவரது தன்மை (தார்மீக முழுமை) ஆகியவற்றால் மனிதகுலத்திலிருந்து வேறுபிரிந்துள்ளார். அவர் எல்லாவற்றையும் அளவிட மற்றும் தீர்மானிக்கும் தரமாக இருக்கின்றார். அவர் எல்லைக்கு அப்படிப்பட்டவர், பரிசுத்தர், பரிசுத்தர்.

தேவன் மனிதர்களை ஐக்கியத்திற்காக படைத்தார், ஆனால் வீழ்ச்சி (ஆதியாகமம் 3) ஒரு பரிசுத்த தேவைனுக்கும் பாவமுள்ள மனிதகுலத்திற்கும் இடையே ஒரு உறவு மற்றும் தார்மீக தடையை ஏற்படுத்தியது. தேவன் தனது உணர்விலான படைப்பை மீட்டெடுக்கத் தேர்ந்தெடுத்தார்; ஆகையால், அவர் தம் மக்களை "பரிசுத்தராக" இருக்குமாறு அழைக்கிறார் (ஒ.பா. லேவி. 11:44; 19: 2; 20: 7,26; 21: 8). YHWH உடனான ஒரு விசுவாச உறவின் மூலம், அவருடைய மக்கள் அவருடனான உடன்படிக்கை நிலைப்பாட்டினால் பரிசுத்தமடைகிறார்கள், அதோடு பரிசுத்த வாழ்க்கையை வாழ அழைக்கப்படுகிறார்கள். (சிறப்பு தலைப்பு: பரிசுத்தமாக்குதல் காண்க, ஒ.பா. மத் 5:48; எபே 4: 1,17; 5: 2-3,15; 1 பேதுரு 1:15).

இந்த பரிசுத்த வாழ்க்கை சாத்தியமாகும் ஏனென்றால் விசுவாசிகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மன்னிக்கப்படுவதால் ஆகும். (1) இயேசுவின் வாழ்க்கை மற்றும் (2) ஊழியம் மற்றும் பரிசுத்த ஆவியின் பிரசன்னம் அவர்களின் மனதிலும் இதயத்திலும் இருப்பதாலாகும். இது விசுவாசிகளின் முரண்பாடான சூழ்நிலையை நிறுவுகிறது:

1. கிறிஸ்துவினால் சுமத்தப்பட்ட நீதியின் காரணமாக பரிசுத்தராக இருப்பது (உதாரணமாக, ரோமர் 4)
2. ஆவியின் பிரசன்னம் இருப்பதால் பரிசுத்தமாக வாழ அழைப்பு (சிறப்பு தலைப்பு: பரிசுத்தமாக்குதலைப் பார்க்கவும்)

விசுவாசிகள் "பரிசுத்தர்கள்" *(hagioi)* (ஹாகியோய்) ஏனென்றால்

1. பரிசுத்தரின் சித்தம் (பிதா, ஒ.பா. யோவான் 6: 29,40; 1 பேதுரு 1: 15-16)
2. பரிசுத்த குமாரனின் கிரியை (இயேசு, ஒ.பா. 2 கொரி. 5:21; 1 பேது. 1: 18-21)
3. பரிசுத்த ஆவியின் எமக்குள் வாசம்செய்தல் (ஒ.பா. ரோமர் 8: 9-11,27)

புதிய ஏற்பாடு எப்போதும் பரிசுத்தவன்களை பன்மையில் குறிப்பிடுகிறது (பிலி. 4:21 ல் ஒரு முறை தவிர, ஆனால் அதன் சூழல் அதை பன்மையாக ஆக்குகிறது). இரட்சிக்கப்படுவது ஒரு குடும்பத்தின், ஒரு உடலின், ஒரு கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்! வேதாகம விசுவாசம் தனிப்பட்ட அழைப்புடன் தொடங்குகிறது, ஆனால் ஒரு கூட்டுறவு ஐக்கியத்தை ஏற்படுத்துகின்றது. நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் ஆரோக்கியம், வளர்ச்சி மற்றும் பக்திவிருத்திக்காக வரங்களளிக்கபட்டுள்ளோம் (ஒ.பா. 1 கொரி. 12:11) - சபை (ஒ.பா. 1 கொரி. 12:

7). ஊழியம் செய்ய நாங்கள் இரட்சிக்கப்பட்டோம்! பரிசுத்தத்தன்மை ஒரு குடும்ப பண்பு ஆகும்!

இது விசுவாசிகளுக்கு ஒரு தலைப்பாகவும் (ஒ.பா. அப்போஸ்தலர் 9: 13,32,41; 26:10; ரோமர் 1: 7; 1 கொரி. 1: 2; 2 கொரி. 1: 1; எபே 1: 1; பிலி. 1: 1; கொலோ. 1: 2) மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் ஒரு வழியாகவும் மாறியது (ஒ.பா. ரோமர் 12:13; 16: 2; எபே 1:15; கொலோ. 1: 4; 1 தீமோ. 5:10; எபி. 6:10). எருசலேமில் உள்ள தாய் சபையில் உள்ள ஏழைகளுக்காக புறஜாதி சபைகளிலிருந்து பவுல் ஒரு முறை காணிக்கைப் பெற்றுக் கொண்டார் (ஒ.பா. ரோமர் 15: 25-26; 1 கொரி. 16: 1; 2 கொரி. 8: 4; 9: 1)

Copyright © 2014 Bible Lessons International